

முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் புதிய பள்ளி வகுப்புகளை காணொலிகாட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா வன்னிவேடு அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கட்டிடத்தை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் – இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளர் ஆர்.காந்தி திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜே.யு.சந்திரகலா, ஊராட்சி மன்ற தலைவர் கற்பகராணி சக்திவேல்குமார், பெற்றோர் – ஆசிரியர் கழகதலைவர் வன்னிவேடு சி.சக்திவேல் குமார், பொறுப்பு தலைமை ஆசிரியர் மு.சதீஷ்குமார், மற்றும் அனைத்து ஆசிரியர்கள், மாணவர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்ட பள்ளி கல்வித் துறை சார்பில் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான மாநில அளவிலான அடைவு தேர்வு 2025 ஆய்வு கூட்டம் மயிலம் பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில்மகேஷ் பொய்யாமொழி கலந்துகொண்டு ஆய்வுக் கூட்டத்தை தொடங்கிவைத்து சிறப்புரை ஆற்றினார். உடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷேக் ரஹ்மான், தொடக்கக்கல்வி இயக்குனர் முனைவர் நரேஷ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன் ஆகியோர் உள்ளனர்.

### முனைவர் க.பொன்முடி, இரா.ராஜீவ்காந்தி சிறப்புரை!

# விழுப்புரம் தெற்கு மாவட்டத்தில் “ஓரணியில் தமிழ்நாடு” மாபெரும் பொதுக்கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி வேண்டுகோள்!



விழுப்புரம், செப். 21 -

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட தி.மு.க சார்பில் இன்று (21.09.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணிக்கு திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, முகையூர் வடக்கு ஒன்றியம், கண்டாச்சிபுரம் (பேருந்து நிலையம் அருகில்) “தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்” “ஓரணியில் தமிழ்நாடு” தீர்மான ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் முகையூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஜி.ரவிச்சந்திரன் வரவேற்புரை ஆற்ற உள்ளார் .

இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் - முன்னாள் அமைச்சர் - திருக்கோவிலூர் சட்டப்பேரவை உறுப்பினர் முனைவர் க.பொன்முடி, கழக மாணவர் அணி செயலாளர் வழக்கறிஞர் இரா.ராஜீவ்காந்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா , மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர்கள் ஜி.கார்த்திகேயன், சிவ. ஜெயராஜ், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை. சுரேஷ், மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி, மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ள கூட்டத்தில் ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள் , நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### டி.கே.எஸ்.இளங்கோவன் – துரை.கி.சரவணன் – எஸ்.கே.பி.கருணாநிதி சிறப்புரை!

# விழுப்புரம் மத்திய மாவட்டத்தில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ பொதுக்கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!



விழுப்புரம், செப். 21 -

விழுப்புரம் (மத்திய) மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் ( மத்திய ) மாவட்ட தி.மு.க சார்பில் இன்று (21.09.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணிக்கு விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, விழுப்புரம் நகரம், புதிய பேருந்து நிலையம் அருகில், நகராட்சி திடலில், “தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டோம்” “ஓரணியில் தமிழ்நாடு” தீர்மான ஏற்பு மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட கழக பொருளாளர் இரா. ஜனகராஜ் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ் வரவேற்புரை ஆற்ற உள்ளார் .

இக்கூட்டத்தில் கழக செய்தி தொடர்புக்குழு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன், விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் துரை.கி.சரவணன் வானூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் எஸ். கே.பி.கருணாநிதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள்.

மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர்கள், நகர ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோர்களின் முன்னிலையில் நடைபெற உள்ள கூட்டத்தில் சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ‘ஆழ்கடலிலும் ஆராயப்படும் தமிழர் வரலாறு!’

# நம் பாரம்பரியத்தை உலகறியச் செய்யும் நமது முதல்வரின் ஈடுபாட்டிற்கு - இந்த ஆய்வுகள் சான்று!

## அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்!



சென்னை, செப். 21-

ஆழ்கடலிலும் ஆராயப்படுகிறது தமிழர் வரலாறு. நம் பாராம்பரியத்தை உலகறியச் செய்யும் நமது முதல்வர் அவர்களின் ஈடுபாட்டிற்கு இந்த ஆய்வுகள் ஒரு சான்று என்று அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

அவரது வலைதளப் பதிவு வருமாறு: -

மூவேந்தர் காலத்திலும், சங்க இலக்கியத்திலும், சங்ககாலத்திற்கும் பின்னான காப்பியங்களிலும் சிறப்பித்துக் கூறப்படும் மிகப்பெரும் கடல் வாணிபத் துறைமுகமாக இருந்த காவிரிப்பூம்பட்டினம் என்றழைக்கப்பட்ட இன்றைய மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள "பூம்புகாரில்" , பழந்தமிழ் நாகரிகத்தின் தொன்மையை கண்டுணர்ந்து ஆராயும் பொருட்டு, இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில், ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. கடலுக்கு அடியில் ஆய்வுகள் மேற்கொள்ளும் இப்பணியினை பேராசிரியர் கே.ராஜன் தலைமை யில், தொல்லியல் துறை இணை இயக்குநர் சிவானந்தம் அவர்களை உள்ளடக்கிய வல்லுநர் குழு தொடங்கியுள்ளது.



பழந்தமிழர்களின் தொன்மையை வெளிக்கொணர்வதில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிக்கும், நம் பாரம்பரியத்தை உலகறியச் செய்வதில் அவரது ஈடுபாட்டிற்கும், இந்த ஆய்வுகள் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்–

# ‘சொல் புதிது’ எனும் திட்டத்தின்கீழ் 5வது கூட்டம்!

## முனைவர் ம.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, செப். 21-

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ‘சொல் புதிது’ என்னும் திட்டத்தின் ஐந்தாவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 17.09.2025 முற்பகல் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் சிவாலயம் ஜெ. மோகன், பேராசிரியர்கள் வ. ஜெயதேவன், ஒப்பிலா மதிவாணன், பாரதிபாலன், சா. சரவணன், ஆ. மணவழகன், ம. இளங்கோவன், மற்றும் ராஜ் கண்ணன், மு. முருகேசன், முனைவர் அ. ஜேம்ஸ், ஆகியோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பின்வரும் 54 சொற்கள் முடிவு செய்யப்பெற்றன.

1 ANPR camera-ஊர்தி எண் காணி, 2 Badge-அடையாள வில்லை , 3 CCTV camera -கண்காணி, 4 DSLR camera - எதிரொளிப் படக்கருவி, 5 Hawala- முறையிலாப் பரிமாற்றம், 6 Hot news- பரபரப்புச் செய்தி, 7 Infotainment - தகவல் போக்கு,8 Life style -வாழ்முறை, 9 Sport-தனி விளையாட்டு, 10. Game- விளையாட்டு / ஆட்டம்,

11.Match-போட்டி விளையாட்டு, 12. Tournament-காலநிலை விளையாட்டு, 13. Winner -வெற்றியாளர், 14 Runner -வெற்றி அண்மையர், 15 Champion -வாகையர், 16 Championship -வாகை நிலை,

17 Client-பயனி, 18 Customer-வாடிக்கையாளர், 19 Biopic-வாழ்க்கைப் படம், 20 Caravan vehicle-வசதி நிறை வண்டி, 21 Bonanza- அதிரடிப் பயன் 22 Trendy- புதுப்போக்கு, 23 Trendsetter - புதுப் போக்கு ஆக்குநர், 24 Chip -சில்லு, 25 Remake-மறு ஆக்கம், 26 Rubber stamp-ஒப்ப முத்திரை, 27 Real estate -நில வணிகம், 28 Grease-மசகு, 29 Dose-கண்டிப்பு, 30 Timeline-கால வரிசை, 31 First look-முதல் நோக்கு, 32 Lyric video-பாடல்வரிக் காட்சி, 33 First single-முதல் பாடல், 34 Gated community-காப்புக் குடியிருப்பு, 35 Academy-கலைக்கழகம்,

36 Cartoon-கருத்துப்படம், 37 Hydro carbon-ஆழ்நிலை நீர்மக் கரிமம், 38 Screen shot-திரைப் பதிவுப் படி, 39 Bumper prize-மாபெரும் பரிசு, 40 CAPTCHA-ஆளறிகுறி,

41 Showcase -காட்சிப் பேழை, 42 Biomining-நுண்ணுயிரி அகழ்வு, 43 Metacognition-மீ அறிதிறன், 44 QR code-விரைவு வினைக் குறி,

45 Hologram-முப்பரிமாண ஒளிப்படம், 46 Bonhomie-நற்பண்பு, 47 Omelette-முட்டை அடை, 48 Half boiled egg-முட்டை அப்பம், 49 Fried rice-பொரி சோறு, 50 Heartin Idly-இதய வடிவ இட்லி, 51 Tetra pack-நாலடுக்குப் பொதி / நாலடுக்குக் கட்டகம்,52 Risk-இடர், 53 Rusk-உலர் ரொட்டி, 54 Chain smoker -தொடர் புகையர்

இவ்வாறு தமிழ் வளர்ச்சிக் கழகம் அறிவித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருப்பத்தூர் கோ. சண்முகம்

**செப்டம்பர் 21 (2002)**



திருப்பத்தூர் நகரச் செயலாளர், மாவட்டக் கழக துணைச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளில் சிறப்புற பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் பாதுகாப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மா. மீனாட்சிசுந்தரம்

**செப்டம்பர் 21 (2020)**



1954ல் தனது 17வது வயதில் கழகத்தில் இணைத்துக் கொண்ட தீவிர சுயமரியாதைக்காரர்.

1970ல் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டம், ஆலத்தம்பட்டி கிளைச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட துணைச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், கீழத் தஞ்சை மாவட்டச் செயலாளர், திருவாரூர் மாவட்ட அவைத்தலைவர், நாகை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் என பல்வேறு கழகப் பொறுப்புகளை வகித்தவர்.

ஊராட்சி மன்றத் தலைவராக – நகர்மன்றத் தலைவராக – 1971, 1977, 1984 ஆகிய மூன்று முறை வேதாரண்யம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றியவர்.

1965–ல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை புகுந்தவர். 1976ஆம் ஆண்டு மிசா காலத்தில் ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “மா.மீ” என்று அன்புடன் அழைக்கப்பட்டவர். “எப்போதும் கருப்புத் துண்டு அணிந்து கம்பீரமாக உலவிய மா.மீ. அவர்கள் கழகத்தினரிடமும் பொதுமக்களிடமும் மிகுந்த நன்மதிப்புப் பெற்றிருந்தவர்” என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**